**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 202/2021**

| | | | |
|---|---|---|---|
| | | **DEPOSITION OF WITNESS** | **PW.3** |
| NAME | சண்முகம் | TALUK | குடியாத்தம் |
| FATHER NAME | சிங்காரம் | RELIGION | இந்து |
| AGE | 49 | OCCUPATION | |
| VILLAGE | புவனேஸ்வரிபேட்டை | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 07.10.2025.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. நான் டிரைவர் வேலை செய்கிறேன். என்னை யார் சாட்சி சொல்ல அழைத்து வந்தது என்றால் ஏகாம்பரம். ஏகாம்பரம் சொல்லி கொடுத்து தான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரியல்ல எனக்கு நேரடியாக தெரியும். வினோத்குமாரை எனக்கு எப்படி தெரியும் என்றால் அவருக்கு 2, 3 முறை அரிசி லோடு ஓட்டியுள்ளேன். மார்கெட்டில் இருந்து மேல்பட்டி ரோட்டுக்கு லோடு ஓட்டினேன்.

2. 26.10.2019 அன்று சுமார் 12.00 மணிக்கு பணம் வாங்கினார். பணம் வாங்கும்போது நான் இருந்தேன், விவேகானந்தன், ஏகாம்பரம், லிங்கேஸ்வரன், வினோத்குமார் இன்னும் சில பேர் இருந்தார்கள். நான் முதல் சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளேன். இதற்கு முன்பு வேறு எங்கும் சாட்சியாக கையெழுத்து போட்டதில்லை. ஏகாம்பரத்தை எனக்கு நன்றாக தெரியும் என்றால் பணம் கொடுத்த தேதியிலிருந்து தான் ஏகாம்பரத்தை தெரியும், அதற்கு முன்பே வினோத்குமாரை தெரியும்.

3. 2வது சாட்சி வினோத்குமாரை தெரியும் என்றால் பணம் கொடுத்த தேதியிலிருந்து தான் தெரியும். கடனுறுதி சீட்டில் எனது முகவரி குறிப்பிடாத நிலையில் எப்படி ஏகாம்பரம் என்னை சாட்சியாக அழைத்து வந்தார் என்றால் நான் தற்போது ஏகாம்பரத்திற்கு வண்டி ஓட்டி வருகிறேன். என்னுடைய டாடா ஏஸ் வண்டியை ஓட்டி வருகிறேன். வினோத்குமாரை எனக்கு தெரியவே தெரியாது என்றால் சரியல்ல.

4. வினோத்குமார் எந்தெந்த கடையில் லோடு எடுப்பார் என்றால் ராஜேந்திரன் கடை, புகைவண்டி கடையில் லோடு எடுத்தார். அவர் உள்ளூரில் லோடு எடுப்பதில்லை என்றாலும் வெளியூரில் தான் லோடு எடுப்பார் என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல. வினோத்குமார் பாண்டை பார்த்ததில்லை என்றாலும் அதிலுள்ள கையெழுத்து அவருடையது இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, கையெழுத்து வினோத்குமாருடையது தான் அவர் தான் என்னை அழைத்து சென்றார்.

5. நாங்கள் மூன்று பேரும் கூட்டு சேர்த்து வினோத்குமாரிடம் இருந்து பணம் பறிக்க இந்த வழக்கை போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் வினோத்குமார் லோடு ஏற்றியிருந்தால் ரூ.50,000/- கடன் வாங்க வேண்டிய அவசியம் அவருக்கு இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, ஒரு முறை லோடு இறக்கி கொண்டிருந்தபோது வினோத்குமார் தாலுக்கா அலுவலகத்திடம் வரசொல்லி நான் லோடு இறக்கிவிட்டு அங்கு சென்று வினோத்குமார் சொல்லி தான் பாண்டில் நான் கையெழுத்து போட்டேன்.

6. வினோத்குமார் அழைத்த உடனே சாட்சி கையெழுத்து போட சென்றேனா என்றால் ஏற்கனவே 2, 3 லோடு வினோத்குமாருக்கு ஓட்டியதால் பழக்கம் ஏற்பட்டது அதனால் வினோத்குமார் ஒரு மாதத்தில் பணத்தை திருப்பி கொடுப்பதாகவும் அதனால் சாட்சி கையெழுத்து போட அழைத்ததால் நான் சாட்சி கையெழுத்து போட்டேன். வினோத்குமாருக்கு தொழில் நல்லபடியாக போயுள்ள நிலையில் எதற்காக கடன் வாங்கினார் என்றால் அவசர தேவையாக பணம் வாங்கினார்.

7. வினோத்குமாருக்கு என்னை தெரியவே தெரியாது என்றாலும் அவர் எந்த லோடுக்கும் என்னை அழைக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் கடனுறுதி சீட்டு நான் கையெழுத்து போடும்போது எழுதப்பட்டிருந்ததா என்றால் எழுதப்பட்டிருந்தது. யார் எழுதியது என்றால் லிங்கேஸ்வரன் எழுதினார். அவர் எப்படி இருப்பார் என்றால் உயரமாக நாமம் போட்டிருப்பார். என்னிடம் காட்டப்படும் கடனுறுதி சீட்டில் பிரதிவாதி வினோத்குமார் என் முன்னிலையில் தான் கையெழுத்து போட்டாரா என்றால் ஆமாம். கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்து வினோத்குமாருடையது இல்லை என்றாலும் ஏகாம்பரத்திற்கு நான் வண்டி ஓட்டுவதால் அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.